தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை

பதவி வெற்றிடங்கள்

தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையின் பின்வரும் வெற்றிடங்களுக்கு தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரித்தான பதவிகளாகும். தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை கொழும்பில் மட்டுமே அமைந்துள்ளது என்பதுடன் வேறு கிளைகள் இல்லையென்பதால் இடமாற்றங்கள் அற்றதாகும்.

01. மருந்துகள் மதிப்பீட்டு அதிகாரி

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மருந்தியல் இளமாணி அல்லது விஞ்ஞான இளமாணி (மருந்தியல்) பாடத்துறையில் (Bachelor of Pharmacy/ Bachelor of Science (Pharmacy)) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் பதவியுடன் தொடர்புடைய விடயத்துறையில் ஒரு (01) வருட கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

மருந்தியலாளராக இலங்கை மருத்துவ பேரவையில் பதிவு செய்திருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. ''கனிஷ்ட முகாமைத்துவ'' (JM 1-1) சேவை வகுதியில் உதவி மருந்து பகுப்பாய்வாளர் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

வயது: 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதவிக்குரித்தான சம்பள நிலை : 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் MM 1-1 ரூபா (53,175 – 10x1,375 – 15x1,910 – 95,575/-) சம்பள அளவில் ஆரம்ப நிலையான 53,175/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

ஆட்சேர்க்கப்படும் முறை : திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

02. உதவி / பிரதிப் பணிப்பாளர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்) - (01 வெற்றிடம்)

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மனித வள முகாமைத்துவம் / அரச நிர்வாகம் / அரச முகாமைத்துவம் / வர்த்தகம் அல்லது பதவிக்கு விடயத்துறையில் வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் பதவியுடன் தொடர்புடைய விடயத்துறையில் ஒரு (01) வருட கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. ''கனிஷ்ட முகாமைத்துவ'' JM சேவை வகுதியில் இயைபுடைய பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

வயது: 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதவிக்குரித்தான சம்பள நிலை : 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் MM 1-1 ரூபா (53,175 – 10x1,375 – 15x1,910 – 95,575/-) சம்பள அளவில் ஆரம்ப நிலையான 53,175/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

ஆட்சேர்க்கப்படும் முறை : திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

03. உதவி / பிரதிப் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) - (01 வெற்றிடம்)

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் கணனி விஞ்ஞானம் / தகவல் தொழில்நுட்பத்தில் அல்லது பதவிக்கு விடயத்துறையில் வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   மற்றும்

   பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் பதவியுடன் தொடர்புடைய விடயத்துறையில் ஒரு (01) வருட கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) ஏழாம் (07) நிலைக்குக் குறையாத நிலையில் இயைபுடைய துறையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

   மற்றும்

   தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் இயைபுடைய துறையில் ஐந்து (05) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

   மற்றும்

   மருந்தியலாளராக இலங்கை மருத்துவ பேரவையில் பதிவு செய்திருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. ''கனிஷ்ட முகாமைத்துவ'' JM சேவை வகுதியில் இயைபுடைய பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

வயது: 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதவிக்குரித்தான சம்பள நிலை: 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் MM 1-1 ரூபா (53,175 – 10x1,375 – 15x1,910 – 95,575/-) சம்பள அளவில் ஆரம்ப நிலையான 53,175/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

ஆட்சேர்க்கப்படும் முறை: திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

04. உதவி மருந்துகள் மதிப்பீட்டு அதிகாரி

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மருந்தியல் இளமாணி அல்லது விஞ்ஞான இளமாணி (மருந்தியல்) பாடத்துறையில் (Bachelor of Pharmacy/ Bachelor of Science (Pharmacy)) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   மற்றும்

   மருந்தியலாளராக இலங்கை மருத்துவ பேரவையில் பதிவு செய்திருத்தல்.
2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) ஆறாம் (06) நிலைக்குக் குறையாத நிலையில் மருந்தியலில் உயர் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்

   மற்றும்

   தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் மருந்து ஒழுங்குபடுத்தல் துறையில் ஐந்து (05) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்

   மற்றும்

   மருந்தியலாளராக இலங்கை மருத்துவ பேரவையில் பதிவு செய்திருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள்

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

வயது : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதவிக்குரித்தான சம்பள நிலை: 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் JM 1-1 ரூபா (42,600 - 10x755 - 18x1,135 - 70,580) சம்பள அளவின் ஆரம்ப நிலையான 42,600/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

ஆட்சேர்க்கப்படும் முறை : எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

05. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அதிகாரி (01 வெற்றிடம்)

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் கணனி விஞ்ஞானம் / தகவல் தொழில்நுட்பத்தில் அல்லது பதவிக்கு இயைபான விடயத்துறையில் வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.
2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) ஏழாம் (07) நிலைக்குக் குறையாத நிலையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்
3. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) ஆறாம் (06) நிலைக்குக் குறையாத நிலையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

   மற்றும்

   தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் இயைபுடைய துறையில் ஐந்து (05) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்
4. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) ஐந்தாம் (05) நிலைக்குக் குறையாத நிலையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

   மற்றும்

   தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் இயைபுடைய துறையில் பத்து (10) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. ''முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்'' (MA 2-1) சேவை வகுதியில் IIஆம் தரத்தில் இயைபுடைய பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

வயது: 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதவிக்குரித்தான சம்பள நிலை: 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் JM 1-1 ரூபா (42,600 - 10x755 - 18x1,135 - 70,580) சம்பள அளவின் ஆரம்ப நிலையான 42,600/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

ஆட்சேர்க்கப்படும் முறை: எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

06. பெறுகை அதிகாரி (01 வெற்றிடம்)

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தொடர் வழங்கல் முகாமைத்துவம் (Supply chain Management) / கணக்கியல் / நிதி முகாமைத்துவம் / வர்த்தகம் அல்லது பதவிக்கு இயைபான விடயத்துறையில் வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. ''முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத'' (MA 1-1) சேவை வகுதியில் IIஆம் தரத்தில் இயைபுடைய பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

வயது: 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதவிக்குரித்தான சம்பள நிலை: 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் JM 1-1 ரூபா (42,600 - 10x755 - 18x1,135 - 70,580) சம்பள அளவின் ஆரம்ப நிலையான 42,600/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

ஆட்சேர்க்கப்படும் முறை: எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

07. நிர்வாக அதிகாரி (01 வெற்றிடம்)

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மனித வள முகாமைத்துவம் / அரச நிர்வாகம் / அரச முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / வர்த்தகம் அல்லது பதவிக்கு விடயத்துறையில் வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. ''முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத'' (MA 1-1) சேவை வகுதியில் IIஆம் தரத்தில் இயைபுடைய பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

வயது: 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதவிக்குரித்தான சம்பள நிலை: 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் JM 1-1 ரூபா (42,600 - 10x755 - 18x1,135 - 70,580) சம்பள அளவின் ஆரம்ப நிலையான 42,600/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

ஆட்சேர்க்கப்படும் முறை: எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

08. உதவி மருந்து பரிசோதகர் (10 வெற்றிடங்கள்)

தகைமைகள்:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சட்டவியல் / விஞ்ஞானம் / உயிரியல்/ பௌதீகவியல் / உணவு விஞ்ஞானம் / மருந்தியல் அல்லது பதவிக்கு விடயத்துறையில் வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

பதவிக்கு இயைபான விடயத்துறையில் ஒரு (01) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

வயது: 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதவிக்குரித்தான சம்பள நிலை: 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் MA 5-1 - 2016 ரூபா (34,870 - 10 x 660-15 x 755 – 11 x 930 – 63,025) சம்பள அளவின் ஆரம்ப நிலையான 34,870/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

ஆட்சேர்க்கப்படும் முறை: எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

09. அபிவிருத்தி அதிகாரி

தகைமைகள்:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சட்டம் / மனித வளம் / தகவல் தொழில்நுட்பம்/ நிதி / கணக்கியல் அல்லது பதவிக்கு விடயத்துறையில் வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

வயது: 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதவிக்குரித்தான சம்பள நிலை: 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் MA 3 - 2016 ரூபா (32,200 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 5 x 750 - 54,960) சம்பள அளவின் ஆரம்ப நிலையான 32,200/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

ஆட்சேர்க்கப்படும் முறை: எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

10. தரவு முகாமைத்துவ அதிகாரி (05 வெற்றிடங்கள்)

தகைமைகள்:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் கணனி விஞ்ஞானம் / புள்ளிவிபரவியல் / பௌதீக விஞ்ஞானவியல் அல்லது பதவிக்கு விடயத்துறையில் வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

வயது: 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதவிக்குரித்தான சம்பள நிலை: 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் MA 3 - 2016 ரூபா (32,200 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 5 x 750 - 54,960) சம்பள அளவின் ஆரம்ப நிலையான 32,200/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

ஆட்சேர்க்கப்படும் முறை: எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

11. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் - (03 வெற்றிடங்கள்)

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) ஐந்தாம் (05) நிலைக்குக் குறையாத நிலையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

உள்வாரி விண்ணப்பதாரிகள்

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் ஏற்புடையதாகும்.

வயது: 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதவிக்குரித்தான சம்பள நிலை: 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் MA 2-1 - ரூபா (30,310 - 10 x 300 - 7 x 350 - 4 x 495 - 20 x 660 - 50,940) சம்பள அளவின் ஆரம்ப நிலையான 30,310/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

ஆட்சேர்க்கப்படும் முறை: எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

ஏனைய விடயங்கள்:

சகல விண்ணப்பதாரர்களும்:

i. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.

ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

- அரச, அரை அரச நிறுவனங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2025-02-13ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பிரதான நிறைவேற்று அதிகாரி, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, அரச பொறியியல் கூட்டுத்தாபனக் கட்டிடம், 02ஆம் தளம், இல. 130, W.A.D. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு-02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தபாலில் அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

தலைவர்,
தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை.